# 11

# கூறப்பட்டவைகளிலேயே மாபெரும் வரலாறுக்கு அடுத்தது

*1965ஆம் ஆண்டில் ஒரு திரைப்படக் கம்பெனியானது, கூறப்பட்டவைகளிலேயே மாபெரும் வரலாறு என்று அழைக்கப் பட்ட இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை பற்றிய திரைப்படம் ஒன்றை வெளியிட்டது. அத்திரைப் படமானது, கிறிஸ்துவின் பிறப்பில் துவங்கி, அவரது பூமிக்குரிய ஊழியம், அவர் புறக்கணிக்கப்படுதல், சிலுவையில் அறையப்படுதல், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவைகளைச் சித்தரித்துக் காட்டியது. அந்தத் திரைப் படத் தயாரிப்பானது இயேசுவைச் சித்தரிப்பதில் வேதாகமத்தின் தெய்வீகப் பதிவுகளுக்கு உண்மையாகக் காணப்படவில்லையென்றாலும், கிறிஸ்துவின் உண்மையான வாழ்க்கையானது கூறப்பட்டவை களிலேயே மாபெரும் வரலாறு என்பதை அதன் தலைப்பு நினை வூட்டக் கூடியதாக இருக்கின்றது.*

*இயேசுவின் பிறப்பு, வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவை, கூறப்பட்டவைகளிலேயே மாபெரும் வரலாறாக இருந்தால், கூறப்பட்டவைகளிலேயே மாபெரும் வரலாறுக்கு அடுத்தது என்னவாக இருக்க முடியும்? புதிய ஏற்பாட்டில் உள்ள நடபடிகளின் புத்தகத்தை ஒருவர் படிக்கும்போது, இதன் விடை தெளிவாக இருக்கின்றது: கூறப்பட்டவைகளிலேயே இரண்டாவது*

*மாபெரும் வரலாறாக இருப்பது, நமது கர்த்தருடைய சபையானது நிலை நாட்டப்பட்டது தான்.*

*தேவனுடைய இராஜ்யமாகிய சபையைக் கொண்டு வருதலின் வரலாறு என்பது, யார் ஒருவரும் எதிர்பார்க்கின்றபடியே மேலான புதிய அனுபவம் மற்றும் பற்றுதலுள்ள உணர்வூட்டும் நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் நிறைந்துள்ளது. நாடகம் போன்ற இந்த நிகழ்ச்சியை நடபடிகள் புத்தகத்தின் ஒரு அதிகாரம்-அதிகாரம் 2-விரித்துரைக் கின்றது.*

*நடபடிகளின் புத்தகத்தில் உள்ள இந்த ஒரு அதிகாரத்தை, இதுதான் முழுப் புத்தகம் அல்லது முழுமையான ஒரு வரலாறு என்ற வகையில் நாம் மறுபரிசீலனை செய்வோம். இது இந்த வரலாற்றை, இதன் அவசியமான மற்றும் ஏவப்படுகின்ற பாகங்களாகப் பிரிப்பதற்கு நம்மை அனுமதிக்கும். கூறப்பட்டவைகளிலேயே மாபெரும் வரலாறுக்கு அடுத்த இந்த வரலாறானது சபை நிலை நாட்டப்பட்டது பற்றிய உணர்வுப் பூர்வமான நிலைகளை நமக்கு முன் வைக்கும்.*

## அத்தியாயம் ஒன்று: "தெய்வீகப் பொழிந்தருளல்"

*இந்தப் புத்தகத்தைத் தொடங்குகையில், நாம் "தெய்வீகப் பொழிந்தருளல்" என்று தலைப்பிடப்பட்ட இதன் முதல் அத்தியா யத்தைத் துவக்கத்தில் பார்க்கின்றோம்.*

*நடபடிகளின் புத்தகத்தின் எழுத்தாளரான லூக்கா, "பெந்தெ கொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒரு மனப்பட்டு ஓரிடத்தில் வந்திருந்தார்கள்" (2:1) என்று கூறினார். ஆகையால் இவ்வரலாற்றின் காட்சியமைப்பானது வரலாற்று நகரமாகிய எருசலேமில் பெந்தெகொஸ்தே நாளன்று நடந்ததாக நிலைப்படுத்தப்பட்டுள்ளது. ஏசாயாவும் (ஏசா. 2:2-4), மீகாவும் (மீகா 4:1-3) "கடைசி நாட்களில்" கர்த்தருடைய பிரமாணமானது எருசலேம் என்ற இடத்திலிருந்து புறப்படும் என்று தீர்க்கதரிசனத்தில் அடையாளப்படுத்தியிருந்தார்கள். பெந்தெகொஸ்தே என்னும் பண்டிகையானது அறுப்பின் பண்டிகையாக (யாத். 23:16) பழைய ஏற்பாட்டில் கொண்டாடப்பட்டது. ரோம சாம்ராஜ்யம் முழுவதிலும் இருந்து இந்த முக்கியமான பழைய ஏற்பாட்டு பண்டிகையை ஆசரிப்பதற்காக யூதர்கள் தங்கள் குடும்பத்தாருடன் எருசலேமுக்கு வந்திருந்தார்கள்.*

*பெந்தெகொஸ்தே நாள் பண்டிகையானது முழு வீச்சில் நடந்து கொண்டிருந்தபோது, வழக்கத்திற்கு மாறான ஒன்று அங்கே நடந்தேறியது:*

> *அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந் திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல் லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியான வர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள் (அப். 2:2-4).*

*அப்போஸ்தலர்கள் மட்டுமே பரிசுத்த ஆவியானவரின் பொழிந் தருளலைப் பெற்றுக் கொண்டனர். அப். 2ம், அப். 2 வரை நடந்த சம்பவங்களின் சந்தர்ப்ப சூழ்நிலைகளும் இணைந்து அதை தெளிவாக் குகின்றன. முதலாவதாக, அப். 2:1ல் கூறப்பட்டுள்ள "அவர்கள்" என்பது, அப். 1:26ல் குறிப்பிட்ட "பதினொறு அப்போஸ்தலர் களையே" குறிக்கிறது. இந்த வரலாறு, தொடக்கத்தில் இதன் மையப் பொருளாக அப்போஸ்தலர்களையே கொண்டிருக்கிறது. இரண்டா வதாக, பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்ததாகக் கூறகின்ற இந்த வசனப்பகுதியில் (அப். 2:1-21) எந்த இடத்திலும், அப்போஸ் தலர்களைத் தவிர வேறு யாரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டதாகச் சுட்டிக் காட்டப்படவில்லை. ஆவியான வரால் அந்நிய பாஷைகளில் அப்போஸ்தலர்கள் பேசியதைக் கண்ட கூட்டத்தாரும், அப்போஸ்தலர்கள் மட்டுமே அவ்வாறு பேசினார்கள் என்று அடையாளம் கண்டு கொண்டார்கள் (அப். 2:7).*

*பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்ட இந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முந்திய மூன்று வருட கால அளவில், அப்போஸ் தலர்கள் எவ்விதத்தில் கிறிஸ்துவால் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் பெறுவார்கள் என்பது பற்றிய வாக்குத்தத்தம், அப்போஸ்தலர்களுக்கு வித்தியாசப்பட்ட சூழ்நிலைகளில் தரப் பட்டிருந்தது. கிறிஸ்து தமது ஊழியத்தைத் தொடங்குகையில், யோவான்ஸ்நானன், "மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால்*

உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" (மத். 3:11) என்று கூறியிருந்தார். கிறிஸ்து தாம் பரத்துக் கேறுவதற்குச் சற்று முன்பு, அப்போஸ்தலர்களிடத்தில், "யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்" (அப். 1:4) என்று கூறியிருந்தார். கிறிஸ்து பரத்துக்கேறும்போது கூறிய பிரிவு உபச்சார வார்த்தைகள், பிதாவானவரின் வாக்குத்தத்தத்தின்படி உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் (லூக். 24:46-49; அப். 1:5) அப்போஸ்தலர்களை எருசலேமிலேயே தங்கியிருக்கும்படி செய்தன. இப்பொழுது, பெந்தெகொஸ்தே நாளன்று காலையில் பரிசுத்த ஆவியானவர் தெய்வீகமாகப் பொழிந்தருளப்பட்டதில், அப்போஸ்தலர்கள்மேல் பரிசுத்த ஆவியானவர் வருவார் என்ற நமது கர்த்தருடைய வாக்குத்தத்தம் நிறைவேறிற்று.

பரலோகத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப் பட்டபோது, சத்தம் கேட்கப்பட்டது: "... பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்க முண்டாகி, ..." (அப். 2:2). கண்களால் காணப்பட்டதும் நடந்தது. "அல்லாமலும் அக்கினி மயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர் களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது" (அப். 2:3). சில விஷயங்கள் உணரப்பட்டன; ஆவியா னவர் தந்தருளின வரத்தின்படி அப்போஸ்தலர்கள் வெவ்வேறு மொழிகளில் பேசியதைக் கேட்டதன் மூலமே அந்த மக்கள், அப்போஸ்தலர்கள்மேல் ஆவியானவர் பொழிந்தருளப்பட்டதைக் கண்டார்கள். காற்று அடிக்கிற முழக்கம்போல சத்தத்தைக் கேட்டு என்ன நடக்கிறதென்று பார்க்கக் கூடி வந்த மக்கள் பேசிய மொழிகளிலேயே அப்போஸ்தலர்கள் பேசினார்கள் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. அப்போஸ்தலர்களிடமிருந்து எதைக் கேள்விப்பட்டோம் என்று பேசிய மக்கள், *dialektos* (ஜென்ம "பாஷை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது; அப். 2:6, 8) மற்றும் glossais ("பாஷைகள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது; அப். 2:11) என்ற கிரேக்க வார்த்தைகளைப் பயன்படுத்தினார்கள்.

*அப்போஸ்தலர்கள் மூன்று தெய்வீக நோக்கங்களுக்காகப் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானப்படுத்தப்பட்டார்கள். முதலாவது, அவர்கள் ஏவப்படுதல் என்ற நோக்கத்திற்காக ஞானஸ்நானப் படுத்தப்பட்டார்கள். அவர்கள் தேவனுடைய வெளிப்படுத்துதலை உலகத்திற்குக் கொடுப்பதற்காக, பரிசுத்த ஆவியானவர் அவர்களை ஏவியிருந்தார். கிறிஸ்து, அப்போஸ்தலர்களுக்கு "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" (யோவா. 14:26) என்று வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார். இப்பொழுது பரிசுத்த ஆவியானவர் வந்ததின் மூலம், கிறிஸ்து அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்திருந்த இந்த ஏவுதலின் வாக்குத்தத்தத்தை அவர்கள் உணர்ந்திருப்பார்கள்.*

*இரண்டாவதாக, அவர்கள் பிரசங்கித்த செய்தியானது தேவனிடத்திலிருந்து வந்தது என்பதை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காகப் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானப்படுத்தப்பட்டார்கள். அற்புதங்கள், அடையாளங்கள் மற்றும் பலத்த செயல்களைச் செய்து, அதன் மூலம் அவர்கள் பிரசங்கிக்கும் வசனத்தை உறுதிப்படுத்த அவர்களுக்கு வல்லமை கொடுக்கப்பட்டது. கிறிஸ்து, "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்" (மாற். 16:17, 18) என்று வாக்குத்தத்தம் செய்திருந்தார். அப்போஸ்தலர்கள், தாங்கள் தேவனால் அனுப்பப்பட்டவர்கள் என்பதை உறுதி செய்வதற்கு அற்புதங்கள் செய்தபோது, பரிசுத்த ஆவியானவர் மூலம் இந்த வாக்குத்தத்தம் நிறைவேறிற்று. இது நிறைவேறியதற்கான ஒரு விளக்கம் அப். 14:3ல் காணப்படுகின்றது: "அவர்கள் அங்கே அநேக நாள் சஞ்சரித்துக் கர்த்தரை முன்னிட்டுத் தைரியமுள்ளவர்களாய்ப் போதகம் பண்ணினார்கள்; அவர் தமது கிருபையுள்ள வசனத்திற்குச் சாட்சியாக அடையாளங்களும் அற்புதங்களும் அவர்கள் கைகளால் செய்யப்படும்படி அநுக்கிரகம் பண்ணினார்."*

*மூன்றாவதாக, அப்போஸ்தலர்கள், மற்ற கிறிஸ்தவர்களின்மேல் கைகளை வைத்து அவர்களுக்கு அற்புத வரங்களைச் செய்யும்*

வல்லமையைத் தருவதற்காகப் பரிசுத்த ஆவியினால் ஞானஸ் நானப்படுத்தப்பட்டனர். இவ்வாறு வல்லமை தந்ததற்கான ஒரு எடுத்துக்காட்டானது அப். 8:14-24ல் காணப்படுகின்றது: சமாரியாவில் பிலிப்புவின் பிரசங்கத்தினால் புதிதாய் மனமாறி கிறிஸ்துவினிடத்தில் வந்திருந்தவர்களுக்காக ஜெபம் பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து, பரிசுத்த ஆவியானவரின் அற்புத வரங்களைக் கொடுப் பதற்காக, பேதுரு மற்றும் யோவான் என்ற இரண்டு அப்போஸ் தலர்கள் எருசலேமிலிருந்து சமாரியாவுக்கு அனுப்பப்பட்டார்கள்.

"கூறப்பட்டவைகளிலேயே மாபெரும் வரலாறுக்கு அடுத்ததான" இதன் ஆரம்பமானது உங்களுக்கும் எனக்கும் என்ன அர்த்தம் தருகின்றது? புதிய ஏற்பாட்டில் காணப்படும் வெளிப்படுத்துதல், ஏவப்பட்ட மனிதர்களால் நமக்குக் கொடுக்கப்பட்டது என்பதே அர்த்தமாகும். புதிய ஏற்பாட்டின் செய்தியானது மிகவும் துல்லிய மானதென்றும், தவறுகளே இல்லாதது என்றும் நாம் நம்ப முடியும். தேவன் தமது அப்போஸ்தலர்களுக்கு பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானத்தினால் பெலன் கொடுத்தார்; இதன் மறுசெயலாக அப்போஸ் தலர்கள், மற்ற கிறிஸ்தவர்களின்மேல் கைகளை வைத்து அவர்களுக் குப் பரிசுத்த ஆவியானவரின் அற்புத வரங்களைக் கொடுத்தார்கள். இவ்விதமாக, புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் அனைவரும் ஏவப்பட்ட, ஆவியானவரால் வழி நடத்தப்பட்ட மனிதர்களாய் இருந்தனர். புதிய ஏற்பாடானது மனிதனுக்கு தேவனுடைய வெளிப்பாடாக இருக்கிறது என்பதை நாம் தைரியமாய் நம்ப முடியும்.

## அத்தியாயம் இரண்டு:
## "வல்லமை நிறைந்த பிரசங்கம்"

கூறப்பட்டவைகளிலேயே மாபெரும் வரலாறுக்கு அடுத்த இதன் இரண்டாவது அத்தியாயம், "வல்லமை நிறைந்த பிரசங்கம்" என்று தலைப்பிடப்பட்டுள்ளது. சபை நிலை நாட்டப்பட்ட நாளானது, பிரசங்கிக்கும் நாளாக இருந்தது. முதலில் எல்லா அப்போஸ்தலர்களும் "தேவனுடைய மகத்துவங்களை" (அப். 2:11) அங்கு கூடியிருந்த பல்வேறு நாட்டினரின் மொழிகளில் அல்லது வட்டார வழக்கு மொழிகளில் பேசினார்கள் என்பது தெளிவாக அறியப்படுகிறது. பிறகு பேதுரு, பதினோரு அப்போஸ்தலர்களோடும் கூட எழுந்து நின்று, இயேசு, கர்த்தராகவும் கிறிஸ்துவாகவும் இருக்கின்றார் (அப். 2:14-36)

என்பதைப் பற்றி ஒரு விரிவான பிரசங்கம் செய்தார். அவர் ஒரு வேளை, அந்நாட்களின் உலகளாவிய மொழியான கிரேக்க மொழியில் அதைப் பேசியிருக்கலாம்.

பலத்த காற்று அடிக்கிற முழக்கத்தைக் கேட்டு, அங்கு கூடியிருந்து இந்த முதல் சுவிசேஷப் பிரசங்கத்தைக் கேட்ட அந்த யூதர்கள் வழக்கத்திற்கு மாறான உள்ளார்ந்த ஆற்றல் உடையவர்களாய் இருந்தனர். அவர்கள் அறிவுக் கூர்மையில் உள்ளார்ந்த ஆற்றல் உடையவர்களாய் இருந்தனர். அவர்கள் தேவனை விசுவாசிப்பவர் களாகவும், பழைய ஏற்பாட்டு வேதவசனங்களை அறிந்தவர்களாகவும் இருந்தனர். அவர்கள் சுவிசேஷத்தின் செய்தியை ஏற்றுக் கொள்ளத் தயாரான ஒரு மனநிலையுடன் இருந்தனர். அவர்கள், கிறிஸ்துவைப் பல நாடுகளுக்கும் எடுத்துச் செல்லக்கூடிய வாய்ப்பையும் பெற்றிருந்த னர். அவர்கள், ரோம சாம்ராஜ்யத்தின் எல்லாப் பகுதிகளிலுமிருந்தும் அங்கு வந்திருந்தார்கள். சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டவர்கள் தங்கள் சொந்த நாடுகளுக்குத் திரும்பும்போது நற்செய்தியுடனே செல்ல முடிந்தது. இது கிறிஸ்தவமானது உடனடியாகப் பரவுவதற் கான வாய்ப்பை அளிப்பதாக இருந்தது.

ஏவுதலின் மூலம், லூக்கா, பேதுருவின் பிரசங்கத்தினுடைய ஒரு சுருக்கத்தை நமக்குக் கொடுத்துள்ளார் (அப். 2:14-36). பேதுருவின் பிரசங்கத்தின்மேல், லூக்காவின் கண்ணோட்டமானது இரண்டு அல்லது மூன்று வித்தியாசப்பட்ட வழிமுறைகளில் புறக்குறிப்புகளா கச் செய்யப்பட முடியும்; ஆனால் ஒரு முன்மாதிரியான உரையின் முக்கியகூறுகளான முன்னுரை, பொருளுரை மற்றும் முடிவுரை என்ப வைகளின் அடிப்படையிலேயே நாம் இதனைப் புறக் குறிப்பிடுவோம்.

பேதுரு தமது உரையை கேட்டவர்கள் என்ன நிலையில் இருந் தார்கள் என்பதைக் கொண்டு துவங்கினார். “இவர்கள் மதுபானத் தினால் நிறைந்திருந்தார்கள்” (அப். 2:13) என்று சில மக்கள் ஏளனத் துடன் சொன்னார்கள். சுவிசேஷப் போதகர்கள் நற்பெயர் பெற்றி ருந்தால் மட்டுமே அவர்களின் பிரசங்கமானது எந்த சூழ்நிலையிலும் ஏற்புடையதாக இருக்கும். நம்பத் தகுதியான ஒழுக்கமோ அல்லது நம்புவதற்குரிய நற்பெயரோ இல்லாத போதகர் எவரும் அவர் பேசுதற்குத் தமது வாயைத் திறப்பதற்கு முன்னாலேயே தோல்வியில் வீழ்த்தப்படுகின்றார். சுவிசேஷத்தை அவர் எவ்வளவு வல்லமையாய் முன்வைத்தாலும் அவர் நம்பப்படவோ அல்லது மரியாதை செலுத்தப் படவோ மாட்டார்.

எனவே, அப்போஸ்தலர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கு ஒரு பதில் கூறுவதுடன் பேதுரு தமது பிரசங்கத்தைத் தொடங்கியதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. உண்மைகளை அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருந்தமைக்கு, அவர் இரண்டு உண்மைகளால் பதில் அளித்தார்: முதலாவதாக, அப்படி நடக்கவில்லை என்று அவர் கூறினார். அவர்களுடைய பொது அறிவுக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார், "நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்டவர்களல்ல, பொழுது விடிந்து மூன்றாம் மணி வேளையாயிருக்கிறதே" (அப். 2:15). பேதுரு, "மதுபானம் பண்ணுதல் என்பது இதற்கு விளக்கமாக முடியாது, பெந்தெகோஸ்தே போன்ற முக்கியமான நாட்களில் சாதாரண யூதர் எவரும் இவ்வளவு காலை நேரத்தில் மதுபானம் பண்ண மாட்டார்கள். நாங்கள் மதுபானம் பண்ணியிருக்கவில்லை என்று பொது அறிவே உங்களுக்குச் சொல்லுமே" என்று சொன்னார். இரண்டாவதாக, பேதுரு அது என்ன என்பதை விளக்கப்படுத்தினார். அவர், "தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது" (அப். 2:16) என்று கூறுகையில் வேதவசனத்தின் பால் வேண்டுகோள் விடுத்தார். பிறகு அவர் யோவேலின் தீர்க்கதரிசனத்தை மேற்கோள் காட்டத் தொடங்கினார். யோவேல் 2:28-32 (அப். 2:17-21)ஐ அவர் கூறத் தொடங்கினார். இவ்விதமாக, பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்ட நிகழ்ச்சியானது, "கடைசி நாட்களின்" தொடக்கமாகும் என்ற யோவேல் தீர்க்கதரிசியின் தீர்க்கதரிசன நிறைவேற்றத்தின் ஒரு பகுதியாகவாவது இருந்தது என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது. "தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்ட படியே இது நடந்தேறுகிறது" என்று சொல்லப்பட்ட அவருடைய வார்த்தைகளே இந்த வினாவிற்குரிய முழுமையான மற்றும் இறுதியான விடையாகக் கருதப்பட வேண்டும்.

பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்ட இந்த நிகழ்ச்சியானது "கடைசி நாட்களின்" காலத்தை ஆரம்பித்தது. அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தினால் வல்லமை பெறுகையில், சபையின் தொடக்கமாகிய அற்புதவரங்களின் காலம் ஆரம்பமாயிற்று. அப்போஸ்தலருடைய நடபடிகளில் பின்னால், இந்த அப்போஸ்தலர்கள் மற்ற கிறிஸ்தவர்களின்மேல் தங்கள் கரங்களை வைத்தனர், அவர்களின் குமாரர்களும், குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொன்னார்கள், வாலிபர்கள் தரிசனம் கண்டார்கள், முதியவர்கள்

சொப்பனம் கண்டார்கள், மற்றும் ஊழியக்காரர்களான ஆண்களும், பெண்களும் தீர்க்கதரிசனம் சொன்னார்கள் (அப். 6:6; 8:4-8, 14-24; 21:8, 9). அப்போஸ்தலர்களின்மேல் பொழிந்தருளப்பட்ட இந்த நிகழ்ச்சியானது ஒரு ஊற்றைப் போல் இருந்து கிறிஸ்தவத்தின் தொடக்க நாட்களில் அற்புதங்கள் என்ற நீரோடையைப் பிறப்பித்தது. அப்போஸ்தலர்களின் கரங்களால் தரப்பட்ட ஆவியானவரின் அற்புத வரங்களை, புதிதாய்ப் பிறந்த குழந்தையின் நிலையில் இருந்த சபையில், புதிய ஏற்பாடானது எழுத்து வடிவில் தோன்றும் வரையிலும் தேவன் பயன்படுத்திக் கொண்டார். புதிய ஏற்பாடானது எழுத்து வடிவில் எழுதி முடிக்கப்பட்டு, அப்போஸ்தலர்களும், அவர்களின் கரங்கள் வைக்கப்பட்டதினால் அற்புதவரங்களைப் பெற்றவர்களும் மரணமடைந்தபோது, சபையின் அற்புத விதமான தொடக்கம் முடிவடைந்து, எழுதப்பட்ட வசனங்களின் மூலம் ஆவியானவர், சபையை வழி நடத்தும் காலம் ஆரம்பமாயிற்று.

ஆகவே பேதுருவின் முன்னுரையானது அங்கு கூடியிருந்தவர்களுக்கு அந்த நிகழ்ச்சி என்ன, என்னவல்ல என்பதைச் சுட்டிக் காட்டுவதாய் இருந்தது. அவர் அவர்களுடைய பொது அறிவுக்கும், வேதவசனத்திற்கும் வேண்டுகோள் விடுத்தார். அவர் தமது உரையைக் கேட்பவர்களை, அவர்கள் இருந்த நிலைப்பாட்டில் இருந்து, இயேசுவே மேசியா என்பதற்கான ஆதாரத்தைக் கவனிக்கத் தயாராகும் நிலைப்பாட்டிற்கு அழைத்துச் சென்றார்.

பேதுருவின் பிரசங்கத்தில் உள்ள பொருளுரையானது, இயேசுவே கிறிஸ்து என்று நம்புவதற்கான வித்தியாசப்பட்ட ஆதார வரிசைகளை முன் வைத்தலைக் கொண்டிருந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் கொண்ட ஒரு பெரிய கூட்டத்தின் முன் உங்களை நிறுத்தி, இயேசுவே கிறிஸ்து என்று நம்புவதற்கான ஆதாரங்களை வரிசைப்படுத்திக் கூறும்படி உங்களைக் கேட்டுக் கொண்டால், நீங்கள் வரிசைப்படுத்திக் கூறக் கூடிய ஆதாரங்கள் எவைகளாக இருக்கும்? அவர் கொடுத்த ஆதாரங்களை நாம் கவனித்துப் பார்த்து, பிறகு அவற்றை நம்முடைய ஆதாரங்களுடன் பரிசீலனை செய்து பார்ப்போம்.

சொன்னதையே மறுபடியும் சொல்லுதல் என்பது நீக்கப்பட்ட போது, பேதுரு ஐந்து வரிசைகளான ஆதாரங்களைப் பட்டியலிட்டு, அவைகளை விளக்கப்படுத்தினார்: முதலாவதாக, அவர் கிறிஸ்துவினுடைய அற்புதங்களின் ஆதாரத்தைச் சுட்டிக்காட்டினார். அவர், "... நீங்கள் அறிந்திருக்கிறபடி, நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு

தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார்" (அப். 2:22) என்று கூறினார். அற்புதங்களின் சாட்சியமே, இயேசு, தேவனிடத்திலிருந்து வந்தவர் என்று நிக்கொதேமுவை நம்பச் செய்திருந்தது. இராக்காலத்தில் கிறிஸ்துவினிடத்தில் வந்த நிக்கொதேமு, கிறிஸ்துவினிடம், "ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான்" (யோவா. 3:2) என்று கூறினார். இயேசு உண்மையான அற்புதங்களைச் செய்தார் என்பதை முற்றிலுமாக நம்பக்கூடிய ஆதார மூலமொன்று, மறுக்க முடியாத நம்பத் தகுந்த பதிவொன்று நமக்கு வெளிப்படுத்தினால், நிக்கொதேமுவைப் போலவே நாமும் கிறிஸ்துவின் அற்புதங்களுக்குப் பதில்செயல் செய்வதற்கு அந்த சாட்சியத்தினால் வற்புறுத்தப் படுவோம்-அவர் தேவனிடத்திலிருந்து வந்தவர் என்று நாம் நம்பும்படிக் கட்டாயப்படுத்தப்படுவோம். தேவனுடைய வசனமாகிய வேதாகமமானது இந்த பூமியிலேயே மிகவும் அதிகமாய் நம்பக் கூடிய தகவல் மூலமாக இருக்கின்றது, அது கிறிஸ்து உண்மையான அற்புதங்கள் செய்தார் என்று சாட்சி கொடுக்கின்றது. இந்த ஆதாரமானது, ஒரே ஒரு முடிவையே சுட்டிக்காட்ட முடியும் - அவர் தேவனால் "அங்கீகரிக்கப்பட்டவர்," அவர் செய்த அற்புதங்களினால் அவர் தேவனுடைய குமாரன் என்று உறுதி செய்யப்பட்டவர். கிறிஸ்துவின் அற்புதங்களைப் பேதுரு, தம் உரையைக் கேட்டவர்களுக்கு நினைவுபடுத்தி, அந்த ஆதாரம் உரிமையுடன் கேட்டுக் கொள்ளும் தர்க்கரீதியான முடிவை ஏற்றுக் கொள்ளும்படி அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

இரண்டாவதாக, பேதுரு தமது உரையைக் கேட்பவர்களுக்கு முன்பாக, *உயிர்த்தெழுதலின் ஆதாரத்தை வைத்தார்.* அவர், இவ்வாறு கூறினார்,

> அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக் கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள். தேவன்

*அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்படக் கூடாதிருந்தது (அப். 2:23, 24).*

அப்போஸ்தலரின் பிரசங்கம் எல்லாவற்றிலும், உயிர்த்தெழுதல் என்பது குறிப்பிடத் தகுந்த ஒரு பாகமாக இருந்தது. இது யூதர்களால் பதில் பேச முடியாத ஒரு விவாதமாக இருந்தது. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலானது கோழைகளை வீரமுள்ள மனிதர்களாகவும், வீரமுள்ள மனிதர்களைக் கோழைகளாகவும் ஆக்கியது. "அவரைச் சிலுவையில் அறைய வேண்டும்" (மத். 27:22) என்று பிலாத்துவின் முன்பாக தைரியமாகக் கத்திய யூதர்கள், வெறுமையான கல்லறை என்ற சத்தியத்தின் முன்பாகப் பயந்து போய்ப் பின் வாங்கினார்கள். கிறிஸ்துவை விசாரிக்கும் சமயத்தில், ''அந்த மனுஷனை நான் அறியேன்" (மத். 26:72) என்று பயத்துடன் கூறிய பேதுரு, வெறுமை யான கல்லறைக்குச் சற்று தூரத்தில் கூடியிருந்த மிகப் பெரிய கூட்டத்திற்கு முன்பாக அவருடைய உயிர்த்தெழுதலை மிகுந்த தைரியத்துடன் பிரசங்கித்தார்.

இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதற்கு உயிர்த் தெழுதலானது முடிவான ஆதாரமளிக்கின்றது. அவர் மரித் தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதை மறுப்பதே, எவரொரு வரும் அவருடைய தெய்வீகத்தை மறுக்கும் ஒரே ஒரு வழியாகும். உயிர்த்தெழுதலே கிறிஸ்தவத்தை அதன் வகையில் நிலைநிறுத்து கின்றது. உலக மார்க்கங்களில், கிறிஸ்துவத்தைத் தோற்றுவித்தவர் மட்டுமே மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தவராக உள்ள உன்னதமான மார்க்கமாக கிறிஸ்தவ மார்க்கம் உள்ளது. அவருடைய உரிமைகோருதல்களை இது உறுதிப் படுத்துகின்றது, அவருடைய வாக்குத்தத்தங்களை இது நம்பச் செய்கிறது, மற்றும் அவருடைய மார்க்கத்தை இது செல்லத்தக்கதாக்குகின்றது.

மூன்றாவதாக, பேதுரு, தீர்க்கதரிசனத்தின் ஆதாரத்திலிருந்து வாதிட்டார். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை முன்னுரைத்திருந்த சங். 16:8-11ஐ அவர் மேற்கோள் காட்டினார்:

*கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக நிறுத்தி நோக்கிக் கொண்டிருக்கிறேன்; நான் அசைக்கப்படாதபடி அவர் என் வலது பாரிசத்திலே இருக்கிறார்; அதனாலே என் இருதயம் மகிழ்ந்தது, என் நாவு களிகூர்ந்தது, என்*

*மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும்; என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காணவொட்டீர்; ஜீவமார்க்கங்களை எனக்குத் தெரியப்படுத்தினீர்; உம்முடைய சந்நிதானத் திலே என்னைச் சந்தோஷத்தினால் நிரப்புவீர் (அப். 2:25ஆ-28).*

*தாவீது தமது தீர்க்கதரிசனத்தில், தன்மைப் பெயரில் பேசியுள்ளார், மேம்போக்காகப் பார்க்கையில் இது அவர் தம்மைப் பற்றியே பேசிக் கொள்வது போலத் தோன்றலாம். தாவீது தம்மைப் பற்றியே இப்படிப் பேசி இருக்க முடியாது என்பதைப் பேதுரு, இரண்டு உண்மைகளைச் சுட்டிக்காட்டி விளக்கினார். முதலாவதாக அவர், தாவீதின் மரணத்தைக் குறிப்பிட்டார். இந்த தீர்க்கதரிசனத்தைச் சொன்ன தாவீது மரித்து, இன்னமும் தனது கல்லறையில் அடக்கம் செய்யப் பட்டவராகவே இருந்தார். தனது ஆதாரமாக, அவர் எருசலேமில் எல்லாரும் பார்க்கும்படியாக இருந்த தாவீதின் கல்லறையைச் சுட்டிக் காட்டினார் (அப். 2:29). இரண்டாவதாக அவர், தாவீதுக்குத் தேவன் அருளிய வாக்குத்தத்தத்தை, அவர்களுக்கு நினைவூட்டினார் (அப். 2:30). தாவீதின் சந்ததிகளில் ஒருவர் அவரது சிம்மாசனத்தில், என்றென்றும் வீற்றிருப்பார் (2 சாமு. 7:12) என்று தேவன் அவருக்கு வாக்குத்தத்தம் செய்திருந்தார். தேவன் கிறிஸ்துவை மரித்தோரிலிருந் தெழுப்பி (அப். 2:31), தமது வலது புறத்தில் ஆவிக்குரிய அரியணையில் அமரச் செய்ததினால், இந்த வாக்குத்தத்தம் கிறிஸ்துவில் நிறைவேறி யிருக்கிறதாகப் பேதுரு கூறினார். இயேசு, தாவீதின் வம்சா வழியி லேயே இந்த உலகத்திற்கு வந்தார், இப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய வலது புறத்தில் ஆவிக்குரிய ஒரு அரியணையில் அவர் வீற்றிருந்து, பூமியில் இருக்கின்ற அவருடைய இராஜ்யமாகிய சபை யின் அரசராக அரசாண்டு கொண்டு இருக்கின்றார்.*

*பேதுரு தமது பிரசங்கத்தின் முடிவில் (அப். 2:34, 35), சங். 110:1லிருந்து தீர்க்கதரிசனத்திலிருந்து இதே விதமான ஒரு விவாதத்தைச் செய்தார். தீர்க்கதரிசனத்தைப் (சங். 16:8-11; 110:1) பற்றிய அவரது குறிப்புரையானது, தேவனிடத்திலிருந்து அனுப்பப் பட்டவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, தேவனுடைய வலது புறத்திற்கு உயர்த்தப்பட்டார் என்பதை நிரூபித்தது. தமது உயிர்த் தெழுதல் மற்றும் உயர்த்தப்படுதல் ஆகியவற்றின் மூலம் இயேசு*

*வானவர், பழைய ஏற்பாட்டின் இவ்விரண்டு தீர்க்கதரிசனங்களையும் தெளிவாக நிறைவேற்றியிருந்தார்.*

*நான்காவதாக பேதுரு, சாட்சியங்களின் ஆதாரத்தைப் பயன் படுத்தினார். அவர், "இந்த இயேசுவைத் தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்" (அப். 2:32) என்று கூறினார். பேதுரு குறிப்பிட்டிருந்த தீர்க்கதரிசனமானது ஒரு உயிர்த்தெழுதலை முன்னுரைத்தது என்பதை யூதர்கள் ஒப்புக் கொண்டிருந்திருக்க வேண்டும். பேதுரு, மரித்தோரிலிருந்து கிறிஸ்து உயிர்த்தெழுந்திருந்ததின் மூலம் தீர்க்கதரிசனத்தின் இப்பகுதியை அவர் நிறைவேற்றியிருந்தார் என்பதை உறுதிப்படுத்தத் தேடினார். இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்திருந்ததைக் கண்ணால் கண்ட சாட்சியங்களாக இருந்தவர்களை எதிர்கொள்ளும்படியாக அவர் தமது உரையைக் கேட்டவர்களை வற்புறுத்தினார். சாட்சியம் சொல்பவர் ஒருவர், உயர்தரமான ஆதாரமாயிருக்கின்றார். சட்ட ரீதியான அதிகாரம் பெற்ற எந்த ஒரு நீதிமன்றமும், ஒருவரது சாட்சியத்திற்கெதிரான முரண்பட்ட ஆதாரம் இல்லாத வரையில், அவரது சாட்சியத்தை ஏற்றுக் கொள்ளும். தேவன் தமது குமாரனின் உயிர்த்தெழுதலை வசனத்தின் மூலமாக உறுதிப்படுத்தியதோடு, அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த பிறகு அவரைக் கண்டு, தொட்டு, அவருடன் உணவுண்டு மற்றும் அவரைக் கற்றறிந்த சாட்சிகளை தமது வசனத்திற்குச் சாட்சியங்களாக வைத்தார். இப்படிப்பட்ட சாட்சியத்தை யாரால் மறுக்கக் கூடும்?*

*ஐந்தாவதாக, பேதுரு பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்ததின் ஆதாரத்தைச் சுட்டிக்காட்டினார். "அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி, பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும், கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்" (அப். 2:33) என்று அவர் கூறினார். இயேசு பரலோகம் செல்வதற்குச் சற்று முன்னதாக, பிதாவினுடைய வாக்குத்தத்தத்தைத் தமது அப்போஸ்தலர்களுக்கு அனுப்புவதாக வாக்குத்தத்தம் செய்தார் (லூக். 24:46-49). பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்டதன் விளைவைத் திரளான கூட்டத்தார் கண்டும் கேட்டுமிருந்தனர். இவ்விதமாக, இயேசு பிதாவின் வலது புறத்திற்கு ஏறிச் சென்று, ஆவியானவருடைய வாக்குத்தத்தத்தைப் பிதாவினிடத்திலிருந்து பெற்று, அப்போஸ்தலர் களின்மேல் பரிசுத்த ஆவியானவரைப் பொழிந்தருளினார் என்பதை*

அவர்கள் அற்புத விதமான உறுதிப்பாடு என்று பெற்றிருந்தார்கள்.

இந்த ஐந்து ஆதார வரிசைகளும் மறுக்க முடியாத ஒரு முடிவை நிலைநாட்டுகின்றன. "ஆகையினால்" என்ற வார்த்தையின் மூலம் பேதுரு இந்த முடிவின்மேல் அவர்களது கவனத்தைக் குவியச் செய்தார். "புதிய ஏற்பாட்டில் 'ஆகையினால்' என்ற வார்த்தையை நீங்கள் காணமிடங்களில் சற்று நிதானித்து, அந்த வார்த்தை ஏன் அங்குள்ளது என்பது பற்றி யோசிக்க வேண்டும், ஏனென்றால் இந்த வார்த்தைக்கு எப்பொழுதுமே காரணம் ஏதாவதொன்று இருக்கும்" என்று ஒருவர் சொன்னார். பேதுரு, ''ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார் என்பதை இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள்'' (அப். 2:36) என்று கூறினார். அவருடைய அற்புதங்கள், மரித்தோரிலிருந்து அவருடைய உயிர்த்தெழுதல், அவரால் தீர்க்கதரிசனம் நிறைவேற்றம், சாட்சியங்களின் ஆதாரம், மற்றும் ஆவியானவர் இறங்கி வந்தது இவையாவும் இயேசுவே தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கிறிஸ்து வாகவும், கர்த்தராகவும் இருக்கின்றார் என்று நிரூபிக்கின்றன.

கூறப்பட்டவைகளிலேயே மாபெரும் வரலாறுக்கு அடுத்தது என்ற பாடத்தின் இந்த அத்தியாயம் நமக்கு அர்த்தப்படுத்துவது என்ன? கிறிஸ்தவத்தின் மையமாக இருப்பவர் கிறிஸ்துவே என்று இது நம்மை நம்பச் செய்வதில்லையா? இயேசுவே கிறிஸ்து என்று நிரூபிக்கும் ஒருவர், கிறிஸ்தவத்தின் நம்பகத் தன்மையை நிரூபிக்கின்றார். கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்றும், அவர் நமது பாவங்களுக்காக மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்றும் பேதுருவால் நிரூபிக்க முடியாமல் மட்டும் போயிருந்தால், கிறிஸ்தவமானது தான் பிறந்த நாளிலேயே மரணமடைந்திருக்கும்!

## அத்தியாயம் மூன்று:
## "ஆழமாய் உணரப்பட்ட கதறுதல்"

கூறப்பட்டவைகளிலேயே மாபெரும் வரலாறுக்கு அடுத்ததில், மூன்றாவது அத்தியாயம் "ஆழமாய் உணரப் பட்ட கதறுதல்" என்று தலைப்பிடப்பட்டுள்ளது. பேதுருவின் உரையைக் கேட்டவர்களில் அநேகர் அவரது பிரசங்கத்தினால் ஆழமாக அசைக்கப்பட்டார்கள். இருதயத்தில் தாக்கப்பட்ட அவர்கள், பேதுருவையும், மற்றுமுள்ள

அப்போஸ்தலர்களையும் பார்த்துக் கதறினார்கள்.

லூக்கா, "இதை அவர்கள் கேட்ட பொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள்" (அப். 2:37) என்று எழுதினார். KJV வேதாகமத்தில், அவர்கள் "தங்கள் இருதயங்களில் குத்தப்பட்டார்கள்" என்றுள்ளது. இருதயத்தில் "குத்தப்படுதல்" என்பது ஒருவருடைய விரலில் ஊசியால் குத்தப் படுவது அல்லது ஒருவரின் கையில் முள்ளினால் குத்தப்படுவது போன்றதல்ல. இது இருதயம் உடைந்து போகுதல் அல்லது இருதயத் தில் அம்பு எய்யப்பட்டது போல உணருதல் என்பதை அர்த்தப் படுத்தும் ஒரு விளக்கக் கூற்றாகும். இதே சொற்றொடரானது அப். 7:54ல் மாறுபட்ட சந்தர்ப்பத்தைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப் பட்டுள்ளது: "இவைகளை அவர்கள் கேட்ட பொழுது, மூர்க்க மடைந்து, அவனைப் பார்த்துப் பல்லைக் கடித்தார்கள்." இந்த நிகழ்ச்சியில், யூதர்கள் ஸ்தேவானின் பிரசங்கத்திற்குக் கோபத்துடன் பதில்செயல் செய்தார்கள். அவர்களின் இருதயங்கள் கோபத்தால் கொந்தளித்தன; அவர்களின் இருதயங்கள் வெறுப்பினால் குத்தப் பட்டன. இருந்தாலும், பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்ட யூதர்கள், குற்ற உணர்வில் மூழ்கடிக்கப்பட்டனர்; குற்றத்தினால் அவர்கள் மிகவும் குழப்பப்பட்டிருந்தார்கள்.

கதறிய மக்கள் ஒருவேளை பேதுருவின் பிரசங்கத்தை இடைமறித் திருக்கலாம். இடை மறித்தல் என்பது எப்பொழுதுமே விரும்பத் தக்கதாக இருப்பதில்லை, ஆனால் இது ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட இடைமறித்தலாகவே இருந்தது. ஒருமுறை ஒரு பிரசங்கியார் பிரசங்கித்துக் கொண்டிருக்கையில், ஒரு மனிதர் "நான் இப்பொழுது ஞானஸ்நானம் பெற முடியுமா?" என்ற கேள்வியுடன் அவரது பிரசங்கத்தை இடைமறித்தார். அந்தப் பிரசங்கியார் பிரசங்கிப்பதை நிறுத்தி விட்டு, அவரை நேரடியாக உற்றுப் பார்த்து, "எனது பிரசங்க மானது சற்றுப் பொறுத்திருக்க முடியும், நாம் இப்பிரசங்கத்தை நிறுத்தி வைத்து விட்டு, உங்களைக் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானப் படுத்து வோம். பின்பு வந்து நான் எனது பிரசங்கத்தை முடிப்பேன்" என்று சொன்னார். இவ்வகையான இடை மறித்தல் என்பது ஒரு தலையீடாக இல்லாமல், அகத் தூண்டுதல் தருவதாக இருக்கின்றது.

அவர்களின் கேள்வியில் உணர்வுக் கிளர்ச்சி நிறைந்திருந்தது. அவர்கள் அக்கறையற்ற விதத்தில் "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?"

என்று கேட்கவில்லை. அவர்களின் கேள்வி, “நாங்கள் இந்த உலகத்தில் என்ன செய்ய முடியும்? நாங்கள் இடர்ப்பாட்டில் இருக்கின்றோம். எங்களுக்கு நம்பிக்கை ஏதாவது உண்டா?” என்பது போல் இருந்தது. அவர்களின் கேள்வி மிகவும் வினயமாகக் கேட்கப்பட்டது.

இந்த கேள்வியை மிகவும் கவனமாகப் பாருங்கள்: “சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?” அவர்கள் இதைத் தங்கள் சக யூதர்களைப் பார்த்துக் கேட்டதால், “சகோதரரே” என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார்கள். இது மார்க்கரீதியான உள்ளர்த்தமுடையதாயிராமல், நாட்டு ரீதியான உள்ளர்த்தம் உடையதாக இருக்கின்றது. அவர்கள் தேவனுக்கு முன்பாகத் தாங்கள் பரிதாபமான நிலையில் இருந்ததை உணர்ந்தனர். தேவன் இந்த உலகத்திற்கு அனுப்பியிருந்த மீட்பராகிய மேசியாவை சிலுவையில் அறைந்ததில் அவர்கள் பங்கேற்றிருந்தனர். பேதுருவின் பிரசங்கமானது அவரது உரையைக் கேட்டவர்கள் தங்கள் பாவத்தை பெரிய எழுத்துக்களில் எழுதியது போல், அவர்கள் சுலபமாகக் காணும்படியாக அவர்கள் முன் வைத்தது (அப். 2:23).

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் முக்கியமான கேள்விகள் பலவற்றைக் கேட்டு, அவைகளுக்குப் பதில் அளித்திருப்பீர்கள், ஆனால், “இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?” என்ற புதிய ஏற்பாட்டின் கேள்வியைக் கேட்டு, அதன்படியே அதற்கு நீங்கள் பதில் கொடுத்திருக்கிறீர்களா? பெந்தெகொஸ்தே நாளன்று அங்கிருந்த மற்றவர்கள், பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு, பெந்தெகொஸ்தே நாளின் அற்புதங்களைப் பார்த்திருக்க வேண்டும், ஆனாலும் அவர்கள் தங்கள் குற்றத்தைப் பாராமல், இந்தக் கேள்வியைக் கேட்காமல் திரும்பிச் சென்று விட்டார்கள். தனிநபருடைய வாழ்க்கையில் பாவம் என்பது மிகவும் துன்பகரமானது, கிறிஸ்துவே இந்த உலகத்திற்கு வந்து சிலுவையில் மரித்து ஒரு பரிகாரம் (கிரயம்) செலுத்துமளவுக்கு அது பெரியதாக இருக்கின்றது. இதைக் காட்டிலும் பெரிய துன்பம் ஒன்று இருக்கின்றது. தேவனுக்கு முன்பாக தமது குற்றத்தைப் பார்க்கவும், அந்தக் குற்றத்திற்கான தேவனுடைய தீர்வைத் தேடவும் மறுத்து ஒருவர் செல்கின்ற போது, அவர் எல்லாவற்றிலும் மாபெரும் துன்பத்தைச் சந்திக்கின்றார்.

## அதிகாரம் நான்கு: “ஏவப்பட்ட பதில்”

*கூறப்பட்டவைகளிலேயே மாபெரும் வரலாறுக்கு அடுத்தது என்ற இப்புத்தகத்தின் நான்காவது அத்தியாயத்திற்கு “ஏவப்பட்ட பதில்'' என்று தலைப்பிடப்பட்டுள்ளது. பேதுரு பரிசுத்த ஆவியானவரால் வழி நடத்தப்பட்டு, குற்றவுணர்வு பெற்ற அக்கூட்டத்தாரின் கேள்விக்கு எளிதில் விளங்கக் கூடிய வகையில் ஒரு பதிலை அளித்தார்: ''நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ் நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்” (அப். 2:38).*

*பரத்துக்கேறுவதற்குச் சற்று முன்பு நமது கர்த்தர், பிரதான கட்டளையென்று நம்மால் பெரும்பாலும் அழைக்கப்படும் கட்டளை யைக் கொடுத்தார். இந்தக் கட்டளையைப்பற்றி புதிய ஏற்பாட்டில் விபரமான வகையில் மூன்று வசனக் குறிப்புகள் இருக்கின்றன: மத். 28:18-20; மாற். 16:15, 16 மற்றும் லூக். 24:46, 47 ஆகியவை. ஒவ்வொன்றும் ஒரு வித்தியாசமான விபரத்தை வலியுறுத்துகின்றது. மாற். 16:15, 16 விசுவாசத்தின் நிபந்தனையை வலியுறுத்துகிறது. லூக். 24:46, 47 மனந்திரும்புதலையும், பாவமன்னிப்பையும் அழுத்தமாகக் கூறுகின்றன. மத். 28:18-20ல் ஞானஸ்நானத்தைப்பற்றி முக்கியத்துவப் படுத்தப்பட்டுள்ளது. இவ்வசனக் குறிப்புகள் மூன்றிலும், விசுவாசம், மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகிய நிபந்தனைகளின் அடிப்படையில்தான் தேவனுடைய கிருபையின் மூலம் இரட்சிப்பும், பாவ மன்னிப்பும் அளிக்கப்படும் என்பது சுட்டிக்காட்டப்படுகின்றது. பிரதான கட்டளையின் வார்த்தை அமைப்புகள் இதைப் புரிந்து கொள்வதில் எவ்வித சந்தேகமும் இல்லாத வகையிலுள்ளன.*

*பிரதான கட்டளையில் விளக்கமாகச் சொல்லப்பட்ட இம்மூன்று நிபந்தனைகளும் அவர்களின் கேள்விக்கான பேதுருவின் பதிலில் காணப்படுகின்றன. பேதுருவின் பிரசங்கத்தினால் அவர்களது இருதயத்தில் கிறிஸ்துவின்மேல் விசுவாசமானது தோற்றுவிக்கப் பட்டது, இந்த விசுவாசமே அவர்கள், அறிவுரைகளை வேண்டிக் கதறும்படி அவர்களைத் தூண்டியது. ஆகையால் யூதர்களின் கேள்விக்கான பேதுருவின் பதிலில் பிரதான கட்டளையில் குறிப்பிடப் பட்ட மற்ற இரண்டு நிபந்தனைகளான மனந்திரும்புதலும், ஞானஸ் நானமும் குறிப்பாகக் குறிப்பிடப்பட்டது. அவர், “நீங்கள் மனந்*

திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்து வின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், ...” (அப். 2:38) என்று கூறினார். பாவமன்னிப்பு என்ற வார்த்தையைப் பேதுரு தனது பதிலில் எந்த இடத்தில் வைத்துள்ளார் என்பதைக் கவனியுங்கள். அவர் இரட்சிப்பு அல்லது பாவமன்னிப்பை ஞானஸ்நானத்திற்கு முன்பு வாக்களிக்கவில்லை. ஆனால் ஞானஸ்நானத்தின் பொழுது பாவமன்னிப்பு கிடைக்கும் என்று வாக்களித்தார். பேதுரு பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டார், எனவே அவர் கொடுத்த பதில் அவருடையதாயிராமல், பரிசுத்த ஆவியானவருடைய பதிலாய் இருந்தது.

கதறியவர்களுக்குத் தரப்பட்ட இந்தப் பதிலானது மிகவும் தெளிவாக, ஆனால் தவறாகப் புரிந்து கொள்வதற்கும் மிகத் தெளிவானதாக இருக்கின்றது. இந்தப் பதிலின் வன்மையையும் வலியுறுத்தலையும் தட்டிக் கழிப்பதற்கு, சிலர் மார்க்கப் போதகர்கள் அப். 2:38ல் (ஆங்கில வேதாகமத்தில்) உள்ள “for” என்ற வார்த்தை (தமிழில் பாவமன்னிப்புக்‘‘கென்று’’) கிரேக்க மொழியில் “அதற்கென்று” என்று பொருள்படும் வார்த்தையிலிருந்தல்ல மாறாக “ஏனென்றால்” (அதாவது உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டதால்) என்று பொருள்படும் வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட தாகக் கூறியுள்ளனர். வேதாகமத்தின் அநேக மொழிபெயர்ப்புகளை ஒப்பிட்டு நோக்கும்போது “eis” என்ற கிரேக்க வார்த்தையானது நம்பத் தகுந்த விதத்தில் ‘‘அதற்கென்று’’ அல்லது ‘‘அதற்காக’’ என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வார்த்தைகள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துப் பார்த்தால், *eis* என்ற கிரேக்க வார்த்தையானது ‘‘அதற்கென்று’’, ‘‘அதற்காக’’ அல்லது இவைகளுக்குச் சமமான சொற்றொடர்களையே தருகின்றன. இவைகளில் எவையும் “ஏனென்றால்” என்ற அர்த்தமுள்ள வார்த்தையைத் தருவதில்லை. பேதுருவின் பதிலில் ஞானஸ்நானத்தின் பொழுதே பாவமன்னிப்பு கிடைக்கின்றது என்பது தெளிவாக வைக்கப்பட்டுள்ளது. தேவனே இந்த நிலைநிற்கும் கேள்விக்குப் பதில் அளிப்பாராக! மனிதர்கள் எவரையும் இதற்குப் புறம்பாக விளக்கம் தரும்படி அனுமதிக்க வேண்டாம்.

புதிய ஏற்பாட்டின் ஒவ்வொரு வசனமும் அதற்கொப்பான இன்னொரு வசனத்தைக் கொண்டுள்ளது என்று யாரோ ஒருவர் சொல்லியிருக்கின்றார். இது எப்பொழுதுமே உண்மையாயிருப்ப

தில்லை என்றாலும், இதில் சில சத்தியங்கள் உள்ளன. புதிய ஏற்பாட்டின் சிலவசனங்கள் அவைகளின் இணைகளைக் கொண் டுள்ளன, அந்த இணையை நாம் கண்ணோக்கும்போது, அதே சத்தியத்தை வேறு வழியில் அது கூறுவதை நாம் காணுகின்றோம். அப். 2:38ன் இணைவசனம் எது? அது அப். 22:16 ஆகும். "ஆண்டவரே, நான் என்ன செய்ய வேண்டும்?" (அப். 22:10அ) என்ற கேள்விக்குப் பதிலைத் தேடி சவுல் தமஸ்குப் பட்டணத்திற்கு வந்திருந்தார். கர்த்தரைக் கண்டு, அவரால் உறுதிப்படுத்தப்பட்டிருந்ததால் அவர் விசுவாசிக் கிறவராய் இருந்தார். அவர் கர்த்தரிடத்தில் கேட்ட கேள்வியால் அவரது மனந்திரும்புதல் சுட்டிக் காட்டப்பட்டது. அவர் கர்த்தரை ஒப்புக் கொண்டதற்கு அவரது கேள்வியில் ஆதாரம் இருந்தது; ஆனால் அவர் தமஸ்குவுக்குச் செல்லும்படியும், அங்கு அவர் செய்ய வேண்டியதென்ன என்று கூறப்படும் என்றும் அவருக்குச் சொல்லப் பட்டது. தமஸ்குவில் அவர் மனந்திரும்பிய நிலையில் ஜெபித்துக் கொண்டு, மூன்று நாளளவும் தனது கேள்விக்கான பதிலுக்காகக் காத்துக் கொண்டிருந்தார். அனனியா அந்தப் பதிலுடன் அவரிடத் திற்கு அனுப்பப்பட்டார். அனனியா அவரிடத்தில் என்ன கூறினார்? அனனியா கொடுத்த பதிலானது அப். 2:38ன் இணைவசனம் என்று நீங்கள் கூறலாம். அவர், "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு" என்று கூறினார். பாவமன்னிப்புக்காகத்தான் ஞானஸ்நானம் என்பதில் சந்தேகம் எதுவும் இருக்குமென்றால், அப். 22:16 வசனமானது நிச்சயமாகவே இந்தக் கேள்வியை என்றென்றைக்கும் ஓயப்பண்ணுகின்றது.

மார்க்கரீதியான தனியார் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த ஒரு இளைஞர், தனது வேதாகம விரிவுரையாளர் பாவமன்னிப்பிற் காகவே ஞானஸ்நானம் என்பதை நம்பவில்லையென்றும், அந்த உபதேசத்தையே அவரது வகுப்பில் போதித்துக் கொண்டிருந்தார் என்றும் ஒருமுறை கூறினார். அந்த இளைஞர் "இதைப் பற்றி என்ன செய்வது என்று எனது தாயாரை கேட்டேன். அதற்கு அவர்கள், வகுப்பு முடிந்த பிறகு அந்த விரிவுரையாளரிடம் சென்று அப். 2:38க்கு விளக்கம் தரும்படி நான் கேட்க வேண்டும் என்றார்கள். நான் அவ்வாறே செய்தேன். நான் எனது வேதாகமத்தைத் திறந்து, அப். 2:38 பகுதியை எடுத்துக் கொண்டு, வகுப்பு முடிந்த பிறகு அவரிடத்தில் சென்று அதை விளக்கும்படி மரியாதையுடன் கேட்டேன். அவர்,

அப். 2:38 ஆனது, பாவமன்னிப்புப் 'பெற்றதால்' என்றுதான் பொருள் படுகின்றது, அது பாவ மன்னிப்புக்'கென்று' எனப்பொருள் படுவதில்லை என்று கூறினார். நான் வீட்டிற்குச் சென்று அவர் என்னிடம் கூறியதை எனது தாயாரிடம் குறிப்பிட்டேன், அப்போது அவர்கள் என்னை அவரிடத்தில் மறுபடியும் சென்று அப். 22:16க்கு விளக்கம் தரும்படி கேட்கச் சொன்னார்கள். நான் அவ்வாறே செய்தேன். நான் எனது வேதாகமத்தைத் திறந்து, அப். 22:16 பகுதியை எடுத்துக் கொண்டு, வகுப்பு முடிந்த பிறகு அவரிடத்தில் சென்று அதை விளக்கும்படி மரியாதையுடன் கேட்டேன். அந்தப் பேராசிரியர் என்ன கூறினார் என்பதை நீங்கள் அறிவீர்களா? அந்த வசனத்தை விளக்க முயற்சி செய்யாமல் அவர் அடுத்த வசனத்திற்குத் தாவிச் சென்று அதை விளக்கப் போவதாகக் கூறினார்" என்றார். அப். 22:16ஐத் தவிர்த்து விளக்க முடியாது. அது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் அல்லது மறுக்கப்பட வேண்டும்.

இந்தக் கேள்விக்குப் பேதுரு கொடுத்த பதிலானது மனித வரலாற்றின் நிறைவான காலமாகிய கிறிஸ்துவின் யுகத்திற்கு தேவனின் பதிலாகும் என்பதை பேதுரு சுட்டிக் காட்டினார். அவர், "வாக்குத் தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண் டாயிருக்கிறது" என்று கூறினார் (அப். 2:39). "உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும்" என்ற விளக்கமானது, நற்செய்திக்குப் பதில் செயல் செய்த யூதர்களையும் ''தூரத்திலுள்ள யாவருக்கும்'' என்ற சொற்றொடரானது எதிர்காலத்தில் சுவிசேஷத்தை ஏற்று கிறிஸ்துவினிடத்தில் வரக் கூடிய புறஜாதிகள் அனைவரையும் உள்ளடக்கியதாய் இருக்கின்றது. "தூரத்திலுள்ள யாவருக்கும்" என்ற சொற்றொடரானது நிச்சயமாகவே புறஜாதிகளைக் குறிப்பதாகவே உள்ளது. பேதுரு, பெந்தெகொஸ்தே நாளுக்கான தேவனுடைய திட்டத்தை மட்டுமல்லாது, எதிர் வரவிருந்த கிறிஸ்துவின் யுகம் முழுவதற்குமான தேவனுடைய திட்டத்தை அறிவித்தார். "இரட்சிக்கப்பட நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்விக்கான தேவனுடைய பதிலை அவர் கொடுத்தார்.

## அத்தியாயம் ஐந்து: ''ஆச்சரியமான பதில்செயல்''

கூறப்பட்டதிலேயே மாபெரும் வரலாறுக்கு அடுத்தது என்ற புத்தகத்தின் ஐந்தாவது அத்தியாயமானது, ''ஆச்சரியமான

*பதில்செயல்" என்று தலைப்பிடப்பட்டுள்ளது. இரட்சிப்பின் சுவிசேஷ நற்செய்தி முதன் முதலாகப் பிரசங்கிக்கப்பட்ட போது, ஆச்சரியமான வகையில் அது ஏற்றுக் கொள்ளப்பட்டதைப் பற்றி லூக்கா கூறினார். அவர், ''அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்" (அப். 2:41) என்று கூறினார்.*

*அந்தக் காலை வேளையில் பேதுருவும் மற்ற அப்போஸ் தலர்களும் எவ்வளவு நேரம் பிரசங்கம் செய்தார்கள் என்று நமக்குக் கூறப்படவில்லை. லூக்கா, "இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி, மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்றும் புத்தி சொன்னான்" (அப். 2:40) என்று எழுதினார். பேதுரு, ஆதாரம் மற்றும் விவாதத்தினால் அவர்களை நம்ப வைத்ததோடு, சாட்சியம் மற்றும் புத்தி சொல்லுதலால் அவர்களை வற்புறுத்தினார்.*

*பேதுருவின் செய்தியைக் கவனித்துக் கேட்டுக் கொண்டிருந்த வர்கள் அதற்கேற்பச் செயல்பட்டார்கள். லூக்கா, "அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ் நானம் பெற்றார்கள். அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்'' (அப். 2:41) என்று விபரமாக எடுத்துச் சொல்லுகின்றார். இந்த மக்கள் வசனத்தைக் கேட்கிறவர் களாய் மட்டும் இராமல், அதற்கேற்ற செயல்களைச் செய்கிறவர்களா யிருந்தார்கள் (யாக். 1:25). அவர்கள் அதைக் கவனிக்கிறவர்களாய் மட்டும் இராமல், அதன்படி வாழ்வதற்கு முடிவு செய்தார்கள். அநேக மக்கள் பிரசங்கத்தை வெறுமனே கேட்டு விட்டுப் போய்விடுவது எவ்வளவு பரிதாபமானது. பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்ட திரளான கூட்டத்தாரில் குறைந்த பட்சம் சிலராவது, அவரது செய்தி யினால் தீர்மானத்திற்கு வந்ததோடில்லாமல், அந்த செய்தியின்படி வாழவும் தங்கள் இருதயங்களை ஒப்புக்கொடுத்தமையால், கிறிஸ்துவினிடத்தில் மனந்திரும்பினர்.*

*மூவாயிரம் பேர், வசனத்தைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டு, ஞானஸ்நானம் பெற்றனர். மனமாறுதல் ஏற்படுவதற்கு முன்னதாக, இரட்சிப்பின் வசனத்தை ஒருவர் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவுக்குள் அநேக மக்கள் இன்று மனம் மாறாததற்குக்*

காரணம், அவர்கள் தங்கள் இருதயங்களில் வசனத்தைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொள்ளாததுதான். வசனமானது சந்தோஷமாய் ஏற்றுக் கொள்ளப்படும்போது, அது எப்பொழுதுமே தனது பணியைச் செய்யும்.

## அத்தியாயம் ஆறு: "வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சரீரம்"

இந்தப் புத்தகத்தின் ஆறாவது தலைப்பானது "வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சரீரம்" என்று தலைப்பிடப்பட்டுள்ளது. ஞானஸ்நானம் பெற்றக்கொண்ட மூவாயிரம் பேரே சபையார் என்பதாக லூக்கா சித்தரித்தார்.

தேவனுடைய தனிச் சிறப்பான ஒரு இராஜ்யம் வரப் போவதாக தீர்க்கதரிசிகள் முன்னுரைத்திருந்தார்கள் (தானி. 2:44). வரப்போகிற மேசியாவுக்கு வழியை ஆயத்தம் பண்ணுகையில் யோவான் ஸ்நானனும் கூட, பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது என்பதாக அறிவித்தார் (மத். 3:1, 2). தேவனால் அனுப்பப்பட்ட மேசியாவாகிய கிறிஸ்து கூட, தமது ஊழியத்தின் போது மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று மக்களை அழைத்தார் (மத். 4:17). கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த பிறகு தாம் பரத்துக்கேறுவதற்கு முன்பு, நாற்பது நாளளவும், தமது சீஷர்களிடத்தில், வரப்போகிற இராஜ்யத்தைக் குறித்துப் பேசினார் (அப். 1:3). தமது அப்போஸ்தலர்களுக்கு கிறிஸ்து கூறிய நிறைவான வார்த்தைகளில் தமது பிதா வாக்குத்தத்தம் பண்ணினதைப் பெற்றுக் கொள்வதற்காக அவர்களைக் காத்திருக்கும்படி கூறினார் (அப். 1:4). அவர் பரத்துக்கேறின பத்து நாட்களுக்குப் பிறகு, ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று, நீண்ட நாட்களாகக் காத்திருந்த அந்தக் காலம் வந்தது. பரிசுத்த ஆவியானவரின் பொழிந்தருளல்ல (அப். 2:1-4), கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு சுவிசேஷத்தின் முதலாவது பிரசங்கம் (அப். 2:14-36) மற்றும் சுவிசேஷத்திற்கு மூவாயிரம் பேர் பதில்செயல் ஆகியவற்றுடன் சபையானது பிறந்தது. சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்தபோது கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டவர்கள், கிறிஸ்துவின் சபைக்குள்ளாக்கப்பட்டார்கள். அந்த நாள் தொடங்கி, இதுவரைக்கும் யாரேனும் ஒருவர் சுவிசேஷத்தைக் கேட்டு, கிறிஸ்துவின்மேல் விசுவாசமாகி, மனந்திரும்பி, இயேசுவை தேவனுடைய குமாரன்

*என்று அறிக்கையிட்டு, கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்று சந்தோஷத்துடன் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகிறபோதெல்லாம் அவர்-பெந்தெகொஸ்தே நாளன்று முதன் முறையாகக் கிறிஸ்து வினிடம் வந்து சேர்ந்த மூவாயிரம் பேருடன்- சேர்த்துக் கொள்ளப் படுகின்றார் (அப். 2:47).*

*பெந்தெகொஸ்தே நாள் முதல், அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் சபையானது ஒரு வாக்குத்தத்தமாகவோ அல்லது தீர்க்கதரிசனமாகவோ பேசப்படாமல், இருக்கின்ற ஒன்றாக, ஜீவனுள்ள உண்மை நிலையாகப் பேசப்படுகின்றது. அப். 2ன் முடிவுப் பகுதியில் லூக்கா, "... இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்" (அப். 2:47) என்று கூறினார். அப். நடபடிகளில் பதிவு செய்யப்பட்டுள்ள பேதுருவின் இரண்டாவது பிரசங்கத்தின் முடிவில், லூக்கா, "வசனத்தைக் கேட்டவர்களில் அநேகர் விசுவாசித்தார்கள்; அவர்கள் தொகை ஏறக்குறைய ஐயாயிரமாயிருந்தது" (அப். 4:4) என்று எழுதினார். அனனியா, சப்பீராள் ஆகியோரின் மரணங்களைத் தொடர்ந்து (அப். 5:1-10) லூக்கா, "சபையாரெல்லாருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும் மிகுந்த பயமுண்டா யிற்று" (அப். 5:11) என்று எழுதினார். ஸ்தேவானைக் கல்லெறிந்த தினால் ஒரு உபத்திரவம் உண்டானபோது (அப். 6:8-7:60), லூக்கா, "...அக்காலத்தில் எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர் தவிர, மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப் போனார்கள்" (அப். 8:1) என்று கூறினார். லூக்காவின் கருத்துப்படி, தேவனுடைய தனிச்சிறப்புள்ள இராஜ்யமாகிய சபையானது வந்திருந்தது.*

*ஒரு மாபெரும் நற்செய்திப் பிரசங்கியாரான மார்ஷல் கீபிள் அவர்களிடத்தில் ஒருவர் ஒரு நாள் வந்து, அவருடைய இருதயத்தைச் சுட்டிக்காட்டி, "சகோதரர் கீபிள் அவர்களே, இதை நான் உணர விரும்புகின்றேன். இங்கே, இப்பொழுதே இதை நான் உணர விரும்புகின்றேன்" என்று சொல்லியதாகக் கூறப்படுகின்றது. சகோதரர் கீபிள் அவர்கள் இக்கட்டான சூழ்நிலையில் நிறுத்தப்படும்போது மறக்க முடியாத வகையில் பதில் கொடுக்கக் கூடிய அற்புதத் திறமை பெற்றவர். அவர் தமது வேதாகமத்தைச் சுட்டிக்காட்டி, "நல்லது, நான் இதைப் படிக்க விரும்புகிறேன். இப்போதே இங்கேயே நான் இதைப் படிக்க விரும்புகிறேன்" என்று அவருக்குப் பதில் அளித்தார்.*

உணர்வுகள் முக்கியமானவைகளே, ஆனால் நம்மை அவைகள் வழிநடத்த நாம் அனுமதிக்கக் கூடாது.தேவனுடைய வசனமாகிய வேதாகமமே நம்மை வழிநடத்த வேண்டும். அவருடைய வசனத்தை உண்மையாகவே ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் கீழ்ப்படிதல் ஆகிய வற்றின் அடிப்படையில் நமது உணர்வுகள் அமையும்போது, புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள கலப்படமற்ற, தூய்மையான சந்தோஷம் நம்மிடத்தில் இருக்கும்.

## முடிவுரை

*கூறப்பட்டவைகளிலேயே மாபெரும் வரலாறுக்கு அடுத்தது* என்ற இந்தப் புத்தகத்தை முடித்து விட்டு, நாம் வாசித்தது என்ன என்று எண்ணிப் பார்க்கத் தொடங்குகின்றோம். நமது செய்திப் பத்திரிகை கள் அல்லது உள்ளூர் மற்றும் தேசியத் தொலைக்காட்சிச் செய்திகள் ஆகியவற்றில் நாம் காண்பவைகளுக்கு மேலாக மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க விஷயம் ஒன்று நம்மில் உதயமாயிருக்கக் காணுகின் றோம். அப். நடபடிகள் என்ற ஏவப்பட்ட புத்தகத்தின் மூலமாக நாம், கடந்த காலத்தை மறைத்திருந்த திரையைப் பின்னுக்கிழுத்து விட்டு, உலகத்தின் வரலாற்றில் இயேசுவின் வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த் தெழுதல் என்பவைகளுக்கு அடுத்த நிலையில் இருக்கின்ற மாபெரும் வரலாற்று நிகழ்ச்சியை நாம் காண்கின்றோம். நீண்ட காலமாகக் காத்திருக்கப்பட்ட தேவனுடைய தனிச் சிறப்பு மிக்க இராஜ்யமாகிய சபை தொடங்கிய உண்மையான வரலாற்றை நாம் கண்டிருக் கின்றோம். இதன் தொடக்கத்தினால், மனிதகுல வரலாற்றின் இறுதி யுகமாகிய, கிறிஸ்தவ யுகம் அல்லது "கடைசி நாட்களின்" யுகம் அறிமுகப்படுத்தப்பட்டதை நாம் கவனித்திருக்கின்றோம்.

நாம் படித்துள்ள இந்தப் புத்தகத்தின் முக்கிய அம்சமான இன்னொரு புத்தகம் தொடர்கின்றது. அதை நாம், *கூறப்பட்டவை களிலே மாபெரும் வரலாற்றின் மூன்றாம் பாகம்* என்று அழைக்க முடியும். அது, இயேசு கட்டியெழுப்பிய சபையின் ஒரு அங்கமாக, நீங்கள் கிறிஸ்துவுக்குள் மனம் மாறுவதேயாகும். இந்த வரலாறு நம் ஒவ்வொருவருக்கும் மாறுபடக் கூடியதாக இருக்கும். நம்மில் அநேகருக்கு இந்த வரலாறு சுலபமாய் எழுதப்படக் கூடியதாக இருக்கும், ஆனால் சிலரது வாழ்க்கையில் இது இன்னமும் நடைபெறாதபடியால், இதை அவ்வளவு சுலபமாய் எழுதி விட

முடியாது. உங்களைப் பொறுத்தமட்டில் நிலைமை என்னவாக இருக்கின்றது? இந்த வரலாறு நடைபெற்றுள்ளதா? நீங்கள் புதிய ஏற்பாட்டின்படியான கிறிஸ்தவராகியிருக்கின்றீர்களா?

நீங்கள் புதிய ஏற்பாட்டின்படியான கிறிஸ்தவராகாதிருந்தால், அது எப்படி நடைபெற முடியும் என்பதை இப்போது அறிந்தவரா யிருக்கின்றீர்கள். சுவிசேஷ நற்செய்தியின் வசனத்தை நீங்கள் சந்தோஷ மாய் ஏற்றுக்கொள்வதன் மூலம், நீங்கள் அதற்குக் கீழ்ப்படிவதன் மூலம் அப். 2ல் கண்டிருக்கின்ற பரலோகத்தின் இராஜ்யமாகிய தேவனுடைய இராஜ்யத்திற்குள் நீங்கள் பிறக்க முடியும்.

## பாட வினாக்கள்

*(விடைகள் 313 ம் பக்கங்களில்)*

1. சபை நிலைநாட்டப்பட்டதை நாம், கூறப்பட்டவை களிலேயே மாபெரும் வரலாற்றிற்கு அடுத்ததாக இருக்கிறது என்று எவ்வகையில் கூற முடியும்?
2. பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர்கள் மாத்திரமே பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றார்கள் என்பதற்கு என்ன ஆதாரத்தை உங்களால் கொடுக்க முடியும்?
3. அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ் நானத்தைப் பெற்றதற்கான தெய்வீகக் காரணங்களை விவாதித் தறியவும்.
4. அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ் நானத்தைப் பெற்றது, நமக்கு இந்நாட்களில் எதை அர்த்தப் படுத்துகின்றது?
5. பேதுரு தமது பிரசங்கத்தில் கிறிஸ்துவின் தெய்வீகத்திற்கு முன்வைத்த ஆதாரத்தை விவாதித்தறியவும்.
6. தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது? கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழாதிருந்தால் நாம் அவரை எவ்வகையிலாவது தேவனுடைய தெய்வீக குமாரன் என்று நினைத்திருக்க முடியுமா?
7. பாவத்தில் இருப்பதைக் காட்டிலும் மாபெரும் துன்பம் ஒன்றை நீங்கள் கற்பனை செய்ய முடியுமா?
8. இரட்சிப்பின் நிபந்தனைகளை பிரதான கட்டளையின் மூன்று

*வசனப்பகுதிகளும் (மத். 28:18-20; மாற். 16:15, 16; லூக். 24:46, 47) மாறுபட்ட விதத்தில் வலியுறுத்தல் செய்வதை விளக்குக.*

9. *அப். 22:16 ஆனது அப். 2:38ஐ எவ்விதம் ஆதரிக்கின்றது என்பதை விவாதித்தறியவும்.*

## வார்த்தை உதவிகள்

***மனமாற்றம்*** *- ஒருவரின் இருதயத்தில் மாற்றம் ஏற்பட்டு, அவர் கிறிஸ்தவர் ஆகுதல்.*

***அற்புதங்களின் காலம்*** *- அப்போஸ்தலர்கள் மற்றும் அவர்கள் கைகளை வைத்து ஜெபிக்கப்பட்டவர்கள் ஆகியோர் அற்புதங்கள் செய்த காலம். இது, சபை தொடங்கிய சமயத்தில், அதன் குழந்தைப் பருவத்தில் இருந்த காலமாகும். இன்றும் தேவன் ஜெபத்திற்குப் பதில் தருகின்றார், ஆனால் கடைசி அப்போஸ்தலரின் மரணத்துடன் அற்புதங்களின் காலம் முடிவு பெற்றது (எபே. 4:11-13; 1 கொரி. 13:8-10).*

***நிக்கொதேமு*** *- இயேசுவிடம் இராக் காலத்தில் வந்த ஒரு போதகர். இயேசு அவருக்கு தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்விதம் என்று போதித்தார் (யோவா. 3).*

***வெளிப்படுத்துதல்*** *- பரிசுத்த ஆவியானவரால் வெளிப்படுத்தப் பட்ட அல்லது அறியும்படி செய்யப்பட்ட சத்தியங்கள். வேதாகமமே மனிதனுக்கு தேவனுடைய வெளிப்படுத்துதலாயுள்ளது.*